**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 861/2024 |
| Deposition of Witness | : | PW- 5 |
| Name | : | விஷ்வநாதன் |
| Father Name | : | குப்பண்ணன் |
| Village | : | கல்வெட்டுபாளையம் |
| Taluk | : | கொடுமுடி |
| Age | : | 57 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.08.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது கல்வெட்டுபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். முத்தூர் – நத்தக்கடையூர் ரோட்டில் நாங்கள் சென்று கொண்டிருக்கும்போது செல்லும்வழியில் நடுரோட்டில் கிடந்த தேங்காயை எடுத்து ஓரமாக போடுவதற்காக ஒருவர் சென்றபோது அவ்வழியாக சென்ற தோஸ்த் வாகனம் அவர்மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அந்த விபத்தில் எனக்கு நெஞ்சில் அடிபட்டது. பின்னர் நான் காங்கேயம் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து எப்படி நடந்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வழியாக எதிரி ஓட்டி வந்த வாகனம் மெதுவாகத்தான் வந்தது என்றால் சரிதான். அ.சா.1 நடுரோட்டில் வந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். வாகன விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.10 17:22:14 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 861/2024 |
| Deposition of Witness | : | PW- 6 |
| Name | : | சாமிநாதன் |
| Father Name | : | பழனி |
| Village | : | பாலநாயக்கன்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 51 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.08.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வாலநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 21.03.2024 ஆம் தேதியன்று முத்தூர் – நத்தக்காடையூர் ரோடு, குட்டப்பாளையம் அருகே நான் எனது உறவினரின் இறங்கலுக்கு தோஸ்த் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் ரோட்டில் கிடந்த தேங்காயை எடுக்க நடுவில் சென்றார். அப்போது நாங்கள் சென்ற வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. எங்களுடன் தோஸ்த் வாகனத்தில் வந்த சம்பூரணம் என்பவருக்கு கையில் அடிப்பட்டுவிட்டது. ஆஜர் எதிரிதான் மேற்படி தோஸ்த் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்திவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நாங்கள் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றோம் என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.5 வரை எனக்கு பழக்கமான நபர்கள் என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனம் மெதுவாகத்தான் சென்றது என்றால் சரிதான். தேங்காய் எடுக்க வந்த அ.சா.1 சண்முகம் என்பவரால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அவர்தான் கிழமேல் சாலையின் தென்புறமாக வந்து வலிய விபத்து ஏற்படுத்திக்கொண்டார் என்றால்

சரிதான். வாகன விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.10 17:22:22 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 861/2024 |
| Deposition of Witness | : | PW- 7 |
| Name | : | சந்திரன் |
| Father Name | : | மணி |
| Village | : | செங்கல்பட்டு |
| Taluk | : | செங்கல்பட்டு |
| Age | : | 41 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.08.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது செங்கல்பட்டு சிவில் சப்ளை சிஸ்சிஐடி பிரிவில் உதவி ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 24.06.2024 ஆம் தேதியன்று மதியம் 13.00 மணிக்கு வெள்ளகோவில் காவல் நிலைய தலைமைக் காவலர் 1609 லோகநாதன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, காங்கேயம் தாலூகா, முத்தூர், காங்கேயம்பாளையத்தைச் சேர்ந்த சின்னசாமி மகன் சண்முகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரினைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப வெள்ளகோவில் காவல் நிலையக் குற்ற எண். 271/2024 – U/S: 279, 337 IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளராகிய திரு.ஜெயக்குமார் அவர்களின் பார்வைக்கு வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் இவ்வழக்கினை உதவி ஆய்வாளர் ஜெயக்குமார் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 24.06.2024 ஆம் தேதியன்று மதியம் 14.00 மணிக்கு சம்பவ இடத்தை ஆஜர் சாட்சிகள் கோபால் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.ஆக 4 குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் கடந்த 24.06.2024 ஆம் தேதி இவ்வழக்கின் சாட்சியான சண்முகம், சம்பாள், லதா, சக்தி, விஸ்வநாதன், சாமிநாதன், வெங்கடாச்சலம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர், கடந்த 01.07.2024 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி கோபாலகிருஷ்ணன் என்பவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் இவ்வழக்கினை மேல் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

6. பின்னர் நான் இவ்வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 01.07.2024 ஆம் தேதியன்று விபத்தை ஏற்படுத்திய TN 69 BE 6592 என்ற பதிவு எண் கொண்ட Ashok Layland dost வாகனம் மற்றும் விபத்துக்குள்ளான மற்றொரு வாகனமான TN 41 AK 3776 TVS XL Super என்ற இருசக்கரவாகனம் ஆகியவற்றின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தி, 26.07.2024 மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்றுகள் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 69 BE 6592 என்ற பதிவு எண் கொண்ட Ashok Layland dost வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், TN 41 AK 3776 TVS XL Super என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

7. பின்னர் இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட சக்தி, சம்பூர்ணம், லதா, சாமிநாதன், விஸ்வநாதன் ஆகியோர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு நகல் வழங்கியும், மேல்சிகிச்சைக்கு அனுப்பி காங்கேயம் அரசு உதவி மருத்துவர்

திருமதி.சுகன்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே ஈரோடு பரணி பாவேந்தன் மருத்துவமனை மருத்துவர் திரு.இன்னோசன்ட் அவர்கள் வழங்கிய சண்முகம், சக்தி, சம்பாள், லதா ஆகியோர்களது காயச்சான்றை பெற்றும் மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(காங்யேம் அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய சக்தி, சம்பூர்ணம், லதா, சாமிநாதன், விஸ்வநாதன் ஆகியோர்களின் விபத்துப் பதிவேடு நகல்கள் முறையே அ.சா.ஆ.7 ஆகவும், அ.சா.ஆ.8 ஆகவும், அ.சா.ஆ.9 ஆகவும், அ.சா.ஆ.10 ஆகவும், அ.சா.ஆ.11 ஆகவும், ஈரோடு பரணி பாவேந்தர் மருத்துவமனை மருத்துவர் வழங்கிய சண்முகம், சக்தி, சம்பாள், லதா ஆகியோர்களின் காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.12 ஆகவும், அ.சா.ஆ.13 ஆகவும், அ.சா.ஆ.14 ஆகவும், அ.சா.ஆ.15 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

8. பின்னர் கடந்த 26.07.2024 ஆம் தேதியன்று சக்தி என்பவருக்கு இடது கையில் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும், சண்முகம் என்பவருக்கு வலது கை பெருவிரலில் ஏற்பட்ட காயம் கொடுங்கயாம் என்றும் லதா என்பவருக்கு வலது கை மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், சம்பாள் என்பவருக்கு வலது கையில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளதால் மாலை 16.00 மணிக்கு வழக்கின் சட்டப்பிரிவினை 279,337 இ.த.வி –ல் இருந்து 279, 337, 338 இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் 1609 லோகநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 26.07.2024 ஆம் தேதியன்று சட்டப்பிரிவு 279, 337,338 IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

புகாரானது ஒரு நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகார்தாரர் சண்முகத்தின் ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்றிதழ் ஆகியவற்றை

விசாரணையின்போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரானது நீதிமன்றத்திற்கு 03.07.2024 ஆம் தேதியன்று வந்தது என்றால் சரிதான். அ.சா.1 தான் தென்புறமாக சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.10 17:22:29 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்